மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 15.

திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு மக்கள் நல் வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

15—ஆலங்குளம் ''அரசு சிமெண்ட்'' தொழிற்சாலை.

*821—திரு. ஜெ. பாலகங்காதரன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) ஆலங்குளம் ''அரசு சிமெண்ட்ஸ்'' நிறுவனத்திலிருந்து வரும் தொழிற்சாலைப் புகையைக் கட்டுப்படுத்த நிறுவப்பட்ட இ.எஸ்.பி. செயல்படாமல் சுற்றுப்புறச் சுகாதாரம், விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதால் அதை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது நடவடிக்கை எடுக்கப் படும் ?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி : (அ) மற்றும் (ஆ) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குளத்திலுள்ள தமிழ்நாடு சிமெண்ட் நிறுவனம் ஈ.எஸ்.பி. என்ற இயந்திரத்தை அமைத்துள்ளது. சில தொழில்நுட்ப காரணங்களால் இந்த ஈ.எஸ்.பி. தொடர்ந்து இயக்கப்படாமல் இருக்கிறது. அது குறித்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 160

திரு. மா. சுந்தர தாஸ், திரு. எஸ். எஸ். ராமசுப்பு, செல்வி ஜி. மல்லிகா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

16—டீசல் தட்டுப்பாட்டினால் நிறுத்தப்பட்ட பேருந்துகள்.

*1047. திரு. மா. சுந்தர தாஸ், திரு. எஸ். எஸ். ராமசுப்பு, செல்வி ஜி. மல்லிகா :—மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்—கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தமிழகத்தில் டீசல் தட்டுப்பாட்டினால் நிறுத்தப் பட்ட பேருந்துகள் அனைத்தும் மீண்டும் விடுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) டீசல் தட்டுப்பாடு நீங்கியவுடன், நிறுத்திவைக்கப்பட்ட பேருந்துகளை மீண்டும் விடுவது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

முற்பகல் 9-40

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, டீசல் தட்டுப்பாடு தீர்ந்ததற்குப் பின்னால் நிறுத்தி வைக்கப் பட்ட பேருந்துகள் மீண்டும் விட நடவடிக்கை எடுக்கப்படும் என்ற பதிலை அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எங்களுடைய பிரச்சினை கன்னியாகுமரி மாவட்டத்தை பொறுத்தவரையிலே உங்களுக்கு நன்றாகத் தெரியும். அங்கே நேசமணி ட்ரான்ஸ்போர்ட் கார்ப்பரேஷன் ஒன்று தான் எங்களுக்கு இருக்கின்ற பேருந்து. தனியார் பேருந்து இயங்காமல் இருக்கின்ற காரணத்தினால் எந்த வழியிலாவது கன்னியாகுமரி மாவட்டத்தில் இருக்கின்ற முளக்கொளி என்.டி.சி. ஓடுகின்ற அந்த ரூட்டிலாவது டீசல் கொடுத்து அந்த 10 சதவீதம் 'கட்'டை ரத்து செய்ய அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் பதில் அளிக்கின்ற போதே நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக் கின்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தாங்கள் பொறுப்பு ஏற்றவுடனேயே இரண்டு நாட்களுக்குள் அது தளர்த்தப்பட வேண்டுமென்று மத்திய அரசுக்கு கடிதம் எழுதியிருக்கிறார்கள் என்று சொன்னேன். காங்கிரஸ் உறுப் பினர் அவர்கள் மத்திய அரசிடத்திலே வலியுறுத்தி அந்த 10 சதவீத 'கட்'டை தளர்த்தினால் உடனடியாக பேருந்துகள் அடுத்த நாளே இயக்கப்படும் என்பதை பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. மா. சுந்தரதாஸ் : பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் நேரடியாக அடுத்த வாரம் சென்று இதை பேச இருக்கிறோம். மேலும் எங்களுடைய மாவட்டத்திலே பல ரூட்டுகள் 1989 வரை நம்முடைய புரட்சித் தலைவர் அவர் களுடைய ஆட்சிக் காலத்திலே மரியாதைக்குரிய இன்று அமைச்சராக இருக்கின்ற மாண்புமிகு முத்துசாமி அவர்களுடைய

தலைமையிலே, இந்தியாவிலேயே மிகத் திறமையான முறையிலே ட்ரான்ஸ்போர்ட் இயங்கியது. கடந்த இரண்டு ஆண்டுக் காலமாக மிக மோசமாக இருந்தது என்பது எல்லோருக்கும் தெரியும். மறுபடியும் அதைவிட திறமையாகத்தான் வர இருக்கிறது. ஆனால் எங்களுடைய மாவட்டத்தை பொறுத்த வரையிலே அந்த புது ரூட்டுகள் கேட்டால் வையபுளாக இல்லை, அன்எக்னாமிக்கல் என்று சொல்கிறார்கள், அத்தகைய ரூட்டுகளையாவது தனியாருக்கு ஒப்படைத்து எங்கள் மாவட்ட மக்களை காப்பாற்ற அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆற்றலும் அறிவும் ஒருங்கே அமைந்து அயராது உழைக்கக்கூடிய மன வலிமை பெற்றிருக்கின்ற நம்முடைய தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் ஓராண்டு காலத்தில் போக்குவரத்துக் கழகம் புதிய மாற்றங்களை உருவாக்கித் தரும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. எஸ்.எஸ். ராமசுப்பு இருக்கையில் இல்லை.

செல்வி ஜி. மல்லிகா : பேரவைத் தலைவர் அவர்களே, தனி நபர் ஒருவரின் பேருந்து இயங்க வசதியாக—என்னுடைய தொகுதியில் பல கிராமங்களில் டீசல் பற்றாக்குறை என காரணம் காட்டி முந்தைய அரசினால் தந்தை பெரியார் போக்குவரத்துக் கழக பேருந்துகள் நிறுத்தப்பட்டதை நமது தமிழகத்தின் விடிவெள்ளி புரட்சித் தலைவியின் ஆட்சியில் மீண்டும் இயங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்தப் பகுதியிலே பேருந்துகளை இயக்க வேண்டும் என்ற குறிப்பை என்னிடத்திலே தந்தால் அது பரிசீலிக்கப்பட்டு வெகு விரைவாக செயல்படுத்தப்படும்.

செல்வி ஜி. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிதம்பரம் டு பொன்னந்திட்டு, சிதம்பரம் டு மானம்பாடி.......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஆகிய இந்த இரண்டு வழித்தடங்களில் விடப்படுமா என்று கேட்கிறீர்களா?

செல்வி ஜி. மல்லிகா : ஆம். ஆகிய இந்த இரண்டு வழித் தடங்களில் விடப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14 ஆம் தேதிக்குப் பிறகு போக்குவரத்துத் துறை மானியத்திற்குப் பிறகு இரண்டு மாத காலத்தில் நம்முடைய ஒப்பற்ற தலைவியாக இருக்கின்ற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் உங்களுடைய கோரிக்கைகள் நிறைவேற்றப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. ஆர். சிங்காரம்.

திரு. ஆர். சிங்காரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காலையில் 7 மணிக்கு புறப்படுகின்ற ஒரு நகர பேருந்து இரவு 12 மணி வரையில் பல்வேறு ரூட்டுகளில் இஷ்டப்படியெல்லாம் போய் வருகிறதே—பழைய அரசு போட்ட உத்தரவு அது—அதை கட்டுப்படுத்த வழி இருக்கிறதா? அதே நேரத்தில் பல இடங்களில் திருவள்ளுவரும் பெரியாரும் அடிக்கடி மோதிக்கொள்கிறார்களே, அது என்ன கோபமா என்பதைப் பரிசீலிப்பீர்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல வழித் தடங்களில் பேருந்தை இயக்கியாக வேண்டிய சூழ்நிலை போக்குவரத்துக் கழகத்திற்கு இருக்கிறது. ஒரு கிராமத்திற்கு அன்சர்வ்டு ஏரியா என்று சொன்னால் அந்த கிராமத்திற்கு இரண்டு முறைகள் அல்லது நான்கு முறைகள் அங்கே பேருந்துகள் இயக்கப்படும். மற்ற இருக்கின்ற காலக்கட்டங்களில் வேறு பகுதிக்கு அதை திருப்பி இயக்குகின்றோம், பேருந்துகள் குறைவாக இருக்கின்ற காரணத்தினால் ஒவ்வொரு வழித் தடங்களில் 4 சிங்கிள் என்று சொல்லி 4 தடங்களில் 4 முறைகள் ஓட்டி நிறுத்தப்படுகிறது. ஆகவே நீங்கள் குறிப்பிட்டிருக்கின்ற ஜனத்தொகை அதிகமாக இருந்து அதிலே பயணம் செய்பவர்கள் அதிகமாக இருந்து லாபம் வருமேயானால் உடனடியாக அது பரிசீலிக்கப்படும். தந்தை பெரியாரும் திருவள்ளுவரும் அடிக்கடி மோதிக்கொண்டு இருப்பதாகச் சொன்னார்கள். இங்கே தந்தை பெரியாரும் திருவள்ளுவரும் நமக்கு ஆசி வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். மோதமாட்டார்கள்.

முற்பகல் 9-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பி. ஈஸ்வரமூர்த்தி.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு பொள்ளாச்சியிலிருந்து தாராபுரம் வழியாக சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழக பஸ் ஒன்று ஓடியது. அதை ஏதோ காரணத்திற்காக தற்போது நிறுத்தி விட்டார்கள். இப்போது அதேபோன்று தாராபுரத்திலிருந்து காங்கேயம் வழியாக சென்னைக்கு ஜீவா போக்குவரத்துக் கழக பஸ் விடவேண்டுமென்று அந்தப் பகுதியில் உள்ள மக்கள் விரும்புகிறார்கள். அதை விட ஏதாவது வாய்ப்பு இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடவும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. எச். எம். ராஜு.

திரு. எச். எம். ராஜு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே கன்னியாகுமரி மாவட்டத்திலும் நீலகிரி மாவட்டத்திலும் மட்டும்தான் தனியார் பேருந்துகள் ஓடுவது இல்லை. ஆகவே இந்த டீசல் தட்டுப்பாட்டை நீலகிரி மாவட்டத்திற்கு தளர்த்தி அங்கே எல்லா தடங்களிலும் பஸ்கள் ஓடுமாறு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பல கழகங்களில் நஷ்டம் ஏற்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள். அரசு அந்த நஷ்டத்தை தவிர்க்க ஏதாவது திட்டங்களை வைத்து இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வி, நிறுத்தி இருக்கிற வழித் தடங்களில் அதிகமாக வண்டிகள் விடவேண்டும் என்பது. நீங்கள் நட்டத்தைப் பற்றிக் கேட்டால் அந்த கேள்வி முரண்பாடான கேள்வி, நீங்கள் அந்த முதல் பகுதியோடு நில்லுங்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் போல நீலகிரி மாவட்டத்தில் விடப்படுமா என்று கேட்க வேண்டும். அந்த நட்டம் என்பது வேண்டாம். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டமும், நீலகிரி மாவட்டமும் தேசியமயமாக்கப்பட்ட மாவட்டங்கள் ஆகும், நீலகிரி மாவட்டத்தில் டீசல் தட்டுப்பாடு இருக்கிறது என்று நான் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறேன். மலைப் பகுதியில் செல்லுகிறபோது கூடுதலாக டீசல் தேவைப்படுகிறது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினரே மத்திய அரசுக்கு நீங்கள் வலியுறுத்தினால் உடனடியாக அந்த பேருந்துகள் கூடுதலாக இயக்கப்படும்.

[1991 செப்டம்பர் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ஏ.டி. சரஸ்வதி.

திருமதி ஏ. டி. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சிக் காலத்தில் எனது தொகுதியான சத்தியமங்கலம் பகுதியில் புதியதாக துவக்கவுள்ள பேருந்து நிலையத்திற்கு அன்னை சந்தியா பேருந்து நிலையம் என்று பெயர் சூட்ட அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வி டீசல் தட்டுப்பாடு தொடர்பாக நிறுத்தப்பட்ட பகுதிகளில் வண்டிகளை அதிகமாக விடவேண்டும் என்பது, பேருந்து நிலையம் பற்றி அல்ல. ஆகவே தனிக் கேள்வி போடவும். அடுத்து திரு. சூ. சே. இராஜமன்னார்.

திரு. சூ. சே. இராஜமன்னார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரப் பேருந்துகள் விடுவதில் 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு ஓடலாம் என்று ஒரு சட்டம் இருக்கிறது. எக்ஸ்ட்ரா ஆர்டினரி சர்க்கம்ஸ்டன்சஸ்-ல் 5 கிலோ மீட்டர் நீட்டிக்கலாம் என்றும் இருக்கிறது. ஆனால் ஒரு இடத்திலிருந்து புறப்பட்டு டவுன் பஞ்சாயத்தை அடைந்து அந்த டவுன் பஞ்சாயத்தில் போர்டை மாற்றி இன்னொரு 30 கிலோ மீட்டர் செல்லலாம் என்று ஒரு சட்டம் இருக்கிறது என்று கேள்விப்படுகிறேன். ஆனால் நான் சொல்லுவது என்னவென்றால் என்னுடைய ஒட்டப்பிடாரம் தாலுகாவில் டவுன் பஞ்சாயத்தே இல்லை. ஒட்டப்பிடாரம் தாலுக்காவில் தூத்துக்குடியிலிருந்து புறப்பட்டு ஒட்டப்பிடாரம் வந்தால் அது தாலுக்கா தலைமையிடம்தான். ஆகவே, டவுன் பஞ்சாயத்து என்பதை மாற்றி தாலுக்கா தலைமையிடம் என்ற ஒரு பிக்ஸேசன் செய்தால் தாலுக்கா தலைமையிடத்திலிருந்து இன்னொரு 30 கிலோ மீட்டர் தூரத்திற்கு பஸ் விட்டால் தொகுதி முழுவதும் கிராமங்களுக்கு எல்லாம் பஸ்விட ஏதுவாக இருக்கும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகர பேருந்துகளை 30 கிலோ மீட்டரிலிருந்து 35 கிலோ மீட்டருக்கு நீட்டிக்கப்பட வேண்டுமென்று சொல்லுகிறார்கள். இப்போது நாம் போக்குவரத்துக் கழகங்களின் மூலம் 13,445 பேருந்துகளை இயக்கிக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக 6,897 நகர பேருந்துகளை இன்றைக்கு இயக்கிக் கொண்டிருக்கிறோம். ஏறத்தாழ நகரப் பேருந்துகள் 51 சதவீதமாக இன்றைக்கு

இயங்கிக் கொண்டிருக்கிற காரணத்தால் போக்குவரத்துக் கழகங்களின் பெரிய நஷ்டத்தை நாம் ஈடுகட்ட வேண்டிய சூழ்நிலையில் இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு காட்டுகிற போது நகரத்திலிருந்து கிராமத்திற்கு பேருந்துகளை விடுகிறார்கள். எங்களுக்கு நகரங்களே இல்லை என்று குறிப்பிட்டு இருக்கிறார்கள். ஆனால் எதற்காக விடுகிறோம் என்று சொன்னால் போக்குவரத்துக் கழகங்களினால் இயக்கப்படுகின்ற பேருந்துகள் மாலை நேரங்களில், இரவு நேரங்களில் வருகிறபோது அதை ரிப்பேர் செய்ய வேண்டியிருக்கிறது; பழுதுபார்க்கவேண்டியிருக்கிறது; அதற்கு ஒரு டிப்போ தேவைப்படுகிறது. ஆகவே தான் நகரத்திலிருந்து கிராமத்திற்கு பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஆகவே இவர் குறிப்பிடுகிற நிலையில் அதற்கு சாத்திய கூறுகள் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. இரா. நடேசன்.

திரு. இரா. நடேசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கன்னியாகுமரி மாவட்டத்தில் டீசல் தட்டுப்பாடு என்ற பெயரை சொல்லிக்கொண்டு 10 சதவீதம் பஸ் குறைத்து இருக்கிறார்கள். அது மட்டுமல்லாமல் மேலும் ஏராளமான வண்டிகளை நிறுத்தினார்கள். அதை இயக்க வேண்டுமென கேட்டபோது நஷ்டம் ஆகிகொண்டிருக்கிறது என்ற காரணத்தைச் சொல்லி தட்டிக் கழிக்கிறார்கள். 10 சதவீத பஸ்களுக்கு மேல் இயக்காமல் விடப்பட்டுள்ள பஸ்களை இயக்க தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.50

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைய தினம் குறிப்பிடுகிறபோதுதான் நம்முடைய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர், புரட்சித் தலைவி அவர்கள், டீசலை சிக்கனப்படுத்துகின்ற நேரத்தில், அப்படி சிக்கனப்படுத்துகிற டீசலை வைத்துக்கொண்டு டீசல் தட்டுப்பாட்டின் காரணமாக நிறுத்தப்பட்ட பேருந்துகளை இயக்கவேண்டுமென்று சொல்கிறபோது, 1,005 பேருந்துகள் இயக்கப்படாமல் நிறுத்தப்பட்டதை மாற்றி, 750 பேருந்துகள் இன்றைக்கு கூடுதலாக இயக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற இடங்களில், மக்கள் ஜனத்தொகை அதிகமாக இருக்குமேயானால், அந்த இடங்களில் இயக்கப்படவேண்டுமென்று குறிப்பிட்டு காட்டினால் அந்த இடங்களில் நாளை மறுதினமே இயக்கப்படும்,

1991 செப்டம்பர் 11

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. என். ஜி. வேணு கோபால்.

திரு. என். ஜி. வேணுகோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய இராணிப்பேட்டை தொகுதியிலே சிப்காட், பி.எச்.இ.எல். போன்ற நிறுவனங்கள் இருக்கின்ற காரணத்தினால் தொழிலாளர் நிறைந்த பகுதியாகவும், அதே நேரத்தில் பள்ளிக்குச் செல்கின்ற குழந்தைகள் நிறைந்த பகுதியாகவும் இருக்கின்ற காரணத்தினால் அங்கே டீசல் தட்டுப்பாடு காரணமாக பேருந்து நிறுத்தப்பட்டதால் இன்றைய தினம் குழந்தைகளும், தொழிலாளர்களும் பேருந்துகளில் தொங்கிக்கொண்டு செல்கின்ற நிலை இருக்கிறது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதைப் பரிசீலித்து, அந்தப் பகுதியிலே குழந்தைகள் பள்ளிக்குச் செல்கின்ற நேரத்திலும் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்கின்ற நேரத்திலும் கூடுதல் பேருந்துகளை விடுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிக்கனப்படுத்துகிற டீசலை வைத்துக்கொண்டு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற இடங்களில் உடனடியாக நிர்வாக இயக்குநரை பார்வையிடச் சொல்லி கூடுதலாக பேருந்துகளை இயக்குவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் 35 கிலோ மீட்டருக்கு பஸ் விட வேண்டுமென்றால் அங்கே ஆயிரம் பேர் குடியிருக்க வேண்டும்; குறைந்தது 6 பேராவது அந்தப் பஸ்சிலே ஏறவேண்டும்; அப்போதுதான் 30, 35 கிலோ மீட்டர் வரை நீட்டிக்க முடியும் என்று சொன்னார்கள். ஆனால் திருப்பூர் நகரைப் போன்று தொழில் நகரங்கள் இருக்கின்ற பகுதியிலே, 400,500 பேர் குடியிருக்கின்ற கிராமங்களில் இருந்துகூட பேருந்துகளிலே 200 பேர் திருப்பூர் நகரத்திற்கு வேலைக்கு வர வேண்டிய நிலை இருக்கிறது. அப்படி வருகின்றபோது, எந்த இடத்திலே எந்தக் கிராமத்திலேயிருந்து அந்த பஸ் புறப்படுகிறதோ அங்கேயே அந்த பஸ் நிரம்பி விடுகிறது. பிறகு இடையிலே இருக்கின்ற கிராமங்களில் அந்த பஸ் நிறுத்த முடியாத அளவிற்கு நெரிசலாக வந்து கொண்டிருக்கிறது. அப்படிப்பட்ட திருப்பூரைப் போன்ற இடங்களுக்கு

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

1991 செப்டம்பர் 11]

கிராமங்களிலே இருந்து அதிகமாக வேலைக்குச் செல்கின்ற அந்தப் பகுதிகளுக்கு 35 கிலோ மீட்டர் என்பதை ஒரு 200 பேர், 300 பேர் இருக்கின்ற கிராமங்களுக்குக்கூட தளர்த்திக் கொடுப்பதற்கு மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் போன்ற நகரங்களைப் பொறுத்தவரையில், நம்முடைய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களிடத்தில் பல்வேறு கோரிக்கைகள் வந்திருக்கின்றன. அதேபோன்று தொழிலில் வளர்ந்து கொண்டு இருக்கிற நகரங்களுக்கு கூடுதலாக பேருந்துகள் விடவேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்தில் எடுத்துச் சொல்லி இருக்கிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களும் உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று குறிப்பிட்டிருக்கிறார்கள். ஆகவே, இது போன்ற பகுதிகளுக்கு உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. பெரியசாமி.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது''

என்பதைப் போன்று நான் வணங்கும் கடவுள் இதய தெய்வம் புரட்சித் தலைவியுடைய ஆசியோடு, எனக்கு விற்கப்பட்ட இரண்டு பேருந்துகளை, பெரியார் மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு அமைச்சர்கள் வந்து துவக்கிவைத்துவிட்டு வந்தார்கள். என்னுடைய தொகுதியிலே உள்ள பர்கூர் என்ற மலைப்பகுதியான ஊராட்சி ஒன்றியத்திலே 33 கிராமங்களை உள்ளடக்கி இருக்கிறது........(மணியடிக்கப்பெற்றது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. வே. பெரியசாமி, ரொம்ப டீடெயிலாக விவரம் சொல்லவேண்டாம், பொதுவான கேள்வி இது, அந்தக் கிராமத்திற்கு விடப்படுமா என்பதற்கான குறிப்புகள், அமைச்சரிடத்திலே இந்தக் கேள்வியைப்பொறுத்து மட்டிலே இருக்காது. இருந்து, அவரே சொன்னாலும்கூட அது சரியில்லை. பொதுவான கேள்வி என்னவென்றால், நிறுத்தப்பட்ட பஸ்களெல்லாம் விடப்படுமா என்பது, அது மாதிரிக் கேளுங்கள்.

திரு. வே. பெரியசாமி : அந்தப் பகுதியிலேயுள்ள ஆதிவாசிகள், ஆதிதிராவிட மக்கள் 25 கிலோ மீட்டர் வரை நடந்து வந்துகொண்டிருக்கிறார்கள். பல இடங்களிலே மினி பஸ்களெல்லாம் விடப்போவதாக அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். கருணையுள்ளம் கொண்ட தாயுள்ளங்கொண்ட என்னுடைய கடவுள் அதை விடுவதற்கு ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9.55

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, அண்ணல் காந்தி அவர்கள் கண்ட கனவுகளை நிறைவேற்றுகிற அரசாங்கமாக இந்த அரசாங்கம் இருக்கிறது. கிராம இராஜ்யம் மலர— மலர்ந்தால்தான் பெற்றிருக்கின்ற சுதந்திரத்தை முழுமையான சுதந்திரத்தை நாம் பெற்றிருக்கிறோம் என்று அண்ணல் அவர்கள் குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதற்கு முழு வடிவம் கொடுக்கக் கூடியவர்தான் நம்முடைய ஒப்பற்ற தலைவராக இருக்கிற தமிழகத்தின் முதல்வர் புரட்சித் தலைவி என்பதை இன்றைக்கு நாடு ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஆகவே, அவருடைய ஆட்சிக் காலங்களில் ஓராண்டுக் காலத்திலே போக்குவரத்துக் கழகங்கள் பல்வேறு புதுமைகளை உருவாக்கி காட்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி எல். சுலோசனா.

செல்வி எல். சுலோசனா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையத்திலிருந்து ஊட்டிக்குச் செல்லும் பேருந்துகளுக்கு எப்பொழுதும் பயணிகள் கூட்டம் அதிகமாக உள்ளது. பேருந்துகள் அதிகரிக்கப்படுமா?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : விரைந்து பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண். 17; திரு. ஆர். பி. பரமசிவம். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்கள்.

17—

கூகையூர் அருகில் பாலம்.

*752. திரு. ஆர். பி. பரமசிவம் :

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா: